1981 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இடத்திலே பாலம் கட்ட வேண்டுமென்றால் ஏறத்தாழ ரூ. 5 இலட்சம் செலவாகும். அது 3 கிலோமீட்டர்தான் நீளமுள்ள ஒரு சாலை ஆகவே, நிதிநிலை சரியான உடன் அவைகள் எல்லாம் கவனிக்கப் படும்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண். 762 திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக் கிடங்குக்கு குளிர்பதன வசதி செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு காலமாக அது செய்யப்படாமலிருக்கிறது?

(இ) அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்

(ஆ) மற்றும் (இ) இச்சவக் கிடங்கை குளிர்பதன வசதி செய்ய ரூ. 2.05 லட்சம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான துவக்கப் பணிகளைத் தலைமைப் பொறியாளர் செய்து கொண்டு வருகிறார்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தச் சவக்கிடங்கில் குளிர் பதன ஏற்பாடு செய்வதற்காக எவ்வளவு பணம் அனுமதிக் கப்பட்டிருக்கிறது என்ற கணக்கை இப்பொழுது அமைச்சர் அறிவித்துள்ளார். 3 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் காரியம் செய்யப்படாமலிருக்கிறது. மனிதன் இறந்து போனதற்குப் பிறகு, அந்தச் சடலத்தைக் கொண்டு போய் ஓரிடத்தில் வைத்தால், அங்கு குளிர் பதன வசதி செய்யவில்லையென்றால், எவ்வளவு மோசமான நிலைமை ஏற்படும். சுகாதாரத்திற்குக் கெடுதல் ஏற்படும்? படிக்கின்ற மாணவர்கள் அந்த இடத்திற்குப் போய், எப்படி சவத்தைக் கையாளுவார்கள் என்பது அமைச்சருக்கு நன்கு தெரிந்த விஷயம். இவ்வளவு நீண்ட காலம் இப்படி ஊறப் போட்டு வைக்கக் காரணம் என்ன? எவ்வளவு டைமுக்குள்ளே அதை வைத்து முடிக்க முடியும் என்பதை அமைச்சர் சொல்ல முடியுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, தாமதத்திற்கு இந்த அரசு காரணம் அல்ல. ஜி. ஓ. எம். எஸ். நெம்பர் 1016, 27-4-1974ல் ரூ. 1,60,000 அதற்கு ஒதுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அப்பொழுது ஏர்கன்டிஷனாக இருக்கக்கூடிய மார்ச்சுரி பிளாக்குக்காக ஒதுக்கவில்லை. சாதாரண மார்ச்சுரி பிளாக்குக்காக ஒதுக்கினார்கள். இந்த அரசாங்கம் வந்தபிறகுதான் அதை ஏர் கன்டிஷன்ட் மார்ச்சுரி பிளாக்காக வைக்க வேண்டுமென்று ரூ. 2.05 இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம். அதற்கான விவரங்கள் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. இன்னும் 6 மாதத்திலே கட்டி முடித்து, ஏர் கன்டிஷன்ட் மார்ச்சுரி இயங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கம் காலதாமதத்திற்குப் பொறுப்பல்ல என்று சொன்னார். முன்பிருந்த அரசாங்கத்தின் தொடர்ச்சியாகத்தான் அரசாங்கத்தைப் பார்க்க முடியுமே தவிர, கட்சிகள் மாறலாம். ஆனால், அரசாங்க இயந்திரமும் அதிலே இருக்கக்கூடிய அதிகாரிகளும் முறையாகச் செயல்படும் நிலைக்கு எந்தக் கட்சி அரசாங்கம் வந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் அரசின் தன்மை. அது இல்லையென்றால் அரசாங்கம் இல்லையென்று அர்த்தம். ஏற்கனவே 3 வருடம் தாமதப்படுத்திவிட்டு, இன்னும் 6 மாதம் டைம் வேண்டுமென்று அமைச்சர் கேட்கிறார். ஒருமாதத்திற்குள்ளே கட்டி முடிக்க முடியாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 6 மாதங்களுக்குள்ளே வேலை நடந்தால் திருப்திப்படுங்கள். கேள்வி நேரத்தில் எப்படி கன்டிஷன் போட முடியும்? மாண்புமிகு உறுப்பினர் 3 வருடங்கள் பொறுத்தாயிற்று. 6 மாதங்கள் பொறுத்துக் கொள்ளக்கூடாதா?

திரு. கு. ரமணி: ஒரு ஏ. சி. மெஷின் பொருத்த 6 மாதங்கள் வேண்டுமா? நீங்கள் ஸ்பீக்கராக இருந்து இதைச் சொல்வதாலே எங்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு அவையில், அமைச்சர் ஒரு உறுதி அளித்திருக்கிறார். உங்களுக்குக் கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று பொருள்.

திரு. கு. ரமணி: இது சாதாரணமாக ரோடு போடுகிற விஷயம் அல்ல. இறந்துபோன மனித சடலங்களை வைக்க வேண்டிய இடம், குளிர் பதன வசதியில்லாமலிருந்தால் எப்படி?

திரு. ரா. உமாநாத்: தலைவர் அமைச்சர் இருக்கையில் உட்கார்ந்து சொன்னால் எங்களுக்குப் பிரச்னை இல்லை, நாங்கள் மீண்டும் கேட்போம். தலைவர் இருக்கையில் உட்கார்ந்து இதைச் சொல்வதால்தான் பிரச்னை.

1981 எப்ரல் 16]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாதம் என்பதே அதை ஒரு லிமிட்டுக்காகச் சொல்லியிருக்கிறேன். அதற்கு முன்பாகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களுடைய எண்ணத்தினுடைய அடிப்படையிலே வெகு விரைவில் அதை முடிக்க நான் முயற்சி எடுத்துக்கொள்வேன்.

சேலம் அரிசிப்பாளையத்தில் பதுக்கி வைக்கப்
பெற்றிருந்த மருந்துப் பொருட்கள்.

*வினா எண். 763 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் அரிசிப்பாளையத்தில் பதுக்கி வைக்கப்பட்டு இருந்த ரூ. 1 இலட்சம் பெறுமான மருந்துப் பொருள்கள் அண்மையில் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் மேற்படி பதுக்கல்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) சுமார் ரூ 4,200 மதிப்புள்ளமருந்துப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

(ஆ) சேலம் மாவட்டம் பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9.20]

திரு, இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மருந்துகள் பதுக்கி வைக்கப்படுவதால், அரிய மருந்துகள் கிடைக்காமல் போய் பல உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட மருந்துகளைப் பதுக்கி வைப்பவர்கள் டாக்டர்களாக இருந்தால் அவர்கள் பட்டத்தை வாபஸ் வாங்கவும், மருந்து வியாபாரிகளாக இருந்தால் அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், லைசென்சுகளை ரத்து செய்யவும், அப்படிப்பட்ட தேசத் துரோகிகளை நாடுகடத்தவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் இரண்டு பேர் திரு. மோகன், திரு. தியாகராசன்